# ஆளுநர் உரையில் ஆர்.எஸ்.எஸ். வாடை அடிக்கிறதே?

**த.**வெ.க அரசின் சார்பிலான முதல் ஆளுநர் உரையில் முந்தைய திராவிட மாடல் அரசின் மொழிக்கொள்கை, தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்கள், சமூக நீதித் திட்டங்கள், தொழில் வளர்ச்சி, கல்விமருத்துவம் உள்ளிட்ட பலவும் அப்படியே அறிவிக்கப்பட்டு, அதன் மீது த.வெ.க.வின் ஸ்டிக்கர் மட்டும் ஒட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பும் கொள்கை முடிவுகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தால்தான் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை இப்போதைய த.வெ.க. ஆட்சியில் மட்டுமல்ல, முந்தைய அ.தி.மு.க. ஆட்சியிலும் மக்கள் பார்க்கத்தான் செய்தார்கள்.

**அதே நேரத்தில், ஆளுநர் உரையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், உரையின் நிறைவில் தேசிய கீதமும் பாடப்படும் என்ற திராவிட மாடல் அரசின் உறுதிப்பாடு, த.வெ.க. அரசிடம் இல்லை. தொடக்கத்திலும் நிறைவிலுமாக இரண்டு முறை தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற பா.ஜ.க.வின் அழுத்தத்திற்கு அடிமையாகி, அதன்படியே செய்திருக்கிறது த.வெ.க. அரசு. அதாவது, இரண்டு முறை தேசிய கீதத்திற்கு மரியாதை. தமிழ்த்தாய் வாழ்த்துக்கு ஒரேயொரு முறைதான் அந்த மரியாதை, தமிழ்நாடு சட்டமன்றத்தில்!**

**“அதனால் என்ன?” என்று கேட்கக்கூடிய சபாநாயகர் வாய்த்திருக்கும் அவையில், இவர்களிடம் நிமிர்ந்த முதுகெலும்பை எதிர்பார்க்க முடியாதுதான். த.வெ.க. அரசு என்பது டெல்லி எஜமானர்களின் புதிய சேவகர்கள். அதனால்தான், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “பா.ஜ.க. வுக்கும் த.வெ.க. வுக்குமான இணக்கம் தெரிகிறது” என்று வெளிப்படையாக விமர்சித்திருக்கிறார்.**

தமிழ்நாட்டின்தனிச்சிறப்புமிக்க, நூற்றாண்டு கால இந்து அறநிலையத்துறை தொடர்பான நிலைப்பாட்டிலும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க.வின் ஊதுகுழலாக த.வெ.க. அரசின் சார்பிலான ஆளுநர் உரை வெளிப்பட்டிருக்கிறது. நீதிக் கட்சிக் காலத்தில் தொடங்கி, ஓமந்தூரார், காமராஜர் போன்ற காங்கிரஸ் முதலமைச்சர்கள் வழி தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வரையிலும் கோயில் சொத்துகளை பராமரிப்பதற்காக வலிமையாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும் இந்து அறநிலையத்துறையை எப்படியாவது சிதைத்து விடவேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் அதன் பரிவாரங்களின் எண்ணமாகும்.

திருக்கோயில்களை மீண்டும் தங்கள் விருப்பத்திற்குரிய விளையாட்டுப் பொருளாகப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களின்



**கோவி.லெனின்**
ஆலோசகர்,
கழக தகவல்
தொழில் நுட்ப அணி

இந்த எண்ணத்தின் பின்னணியில் உள்ள ரகசியத் திட்டம். திராவிட மாடல் ஆட்சியில் அதற்கு இடம் கொடுக்கப்பட வில்லை. 4000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டதுடன், பலதரப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்த ஏறத்தாழ 1,055 திருக்கோயில்களுக்கு சொந்தமான 8,100 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டன. இதன் மதிப்பு சுமார் 8,500 கோடி ரூபாய். ஆன்மிக அன்பர்களின் பொற்காலமாக திராவிட மாடல் ஆட்சி திகழ்ந்தது.

தற்போதைய த.வெ.க. அரசு, ஆர்.எஸ்.எஸ். விரும்புவது போல இந்து அறநிலையத் துறையை, சீர்திருத்தம் என்ற பெயரில் சிதைப்பதற்கேற்ற வகையில் ஓர் அமைச்சரை அந்தத் துறைக்கு நியமித் திருப்பதுடன், ஆளுநர் உரையில், “இந்து சமய அறநிலையத்துறையில் கட்டமைப்புச் சீர்திருத்தங்களை இந்த அரசு மேற்கொள்ளும். அசையும் மற்றும் அசையா சொத்துகள் அனைத்தும் அதன் புனிதமான நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவது இந்த அரசால் உறுதி செய்யப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக முறைகேடுகளைக் களைவதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக வெளிப்பார்வைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஆளுநர் உரையில், உள்ளார்ந்த சதி நோக்கம் மறைந்திருப்பதைக் கவனிக்க மறக்கக்கூடாது.

**புனிதமான நோக்கங்கள் என்ற சொல்லுக்குள் ஆர்.எஸ்.எஸ். அஜெண்டா புதைத்திருக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. காரணம், திருக்கோயில் சொத்துகள் ஆன்மிகப் பணியுடன் அறப்பணிகளை மேற்கொள்வதற்கும் பயன்படுகின்றன. ‘மக்கள் தொண்டும் மகேசன் தொண்டுதான்’ என்கிற தமிழ் அருள் நெறியின் அடிப்படையில், கருணை இல்லங்கள், பக்தர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கான மண்டபங்கள், அவர்களுக்குத் தேவையான பூசைப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகள், ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகளுக்கான கல்வி நிலையங்கள் எனப் பல திட்டங்கள், ஆன்மிகப் பணியுடன் தொடர்புடைய அறப்பணியாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது திராவிட மாடல் ஆட்சியில் மட்டுமல்ல, அதற்கு முந்தைய ஆட்சிக்காலங்களிலும் நடைபெற்றுள்ளது.**

எடுத்துக்காட்டாக, பழநியில் உள்ள அருள்மிகு பழநியாண்டவர் ஆடவர் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகியவையும், குற்றாலத்தில் உள்ள பராசக்தி கல்லூரியும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றன. அதுபோலவே, சென்னையில் கடந்த ஆட்சியில் கற்பகாம்பாள் பெண்கள் கலை - அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் சைவ - வைணவத் திருக்கோயில்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கான ஆகமப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் அனைத்து சாதி அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பெண் ஓதுவார்கள் ஆகியோருக்குப் பணி ஆணை வழங்கி, கோயில் கருவறைக்குள் சமூக நீதியை நிலைநாட்டியதுடன், ‘அன்னைத் தமிழில் அர்ச்சனை’ என்று திருக்கோயில்களில் தமிழ் மந்திரங்கள் ஒலிக்கச் செய்தார்.

இவை அனைத்தும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் கண்களை உறுத்தின. கல்லூரிகள் கட்டுவதால், திருக்கோயில்களின் புனிதமான நோக்கம் சிதைவதாகவும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சகம் இவற்றை செய்யக்கூடாது என எதிர்ப்புக் குரல்கள் கேட்டன. தனது பரிவார அமைப்புகள் மூலம் வழக்குத் தொடுத்துப் பார்த்தன. இந்து சமய அறநிலையத்துறையையே கலைக்க வேண்டும் என்றன.

**‘கலைக்க வேண்டும்’ என்கிற ஆர்.எஸ்.எஸ். கொள்கையின் வாடைதான், ‘கட்டமைப்புச் சீர்திருத்தம்’ என்ற பெயரில் த.வெ.க. அரசின் சார்பிலான ஆளுநர் உரையில் வெளிப்பட்டிருக்கிறதோ! நூற்றாண்டுக் கால அறநிலையத்துறையின் அறப்பணிகளையும், கருவறை சமூக நீதியையும் தொடர்ந்திடும் துணிச்சல் த.வெ.க. அரசுக்கு இருக்கிறதா?**

---

தமிழ்நாட்டில் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான

## பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் - செவிலியர்கள் பற்றாக்குறை!

### த.வெ.க. அரசுக்கு பொதுமக்கள் கோரிக்கை!

பொள்ளாச்சி, ஜூன் 21–

தமிழகத்தில் சிறந்த மருத்துவமனையில் ஒன்றான பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. அதனை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி உடுமலை ரோட்டில் செயல்பட்டு வரும், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், உள்நோயாளிகள் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மகப்பேறு பிரிவு, பச்சிளம் குழந்தைகள் பிரிவு, சித்தா பிரிவு, கண் சிகிச்சை பிரிவு பல் சிகிச்சை பிரிவு உள்பட சுமார் 20க்கும் மேற்பட்ட சிகிச்சை பிரி வுகள் செயல்படுகின்றன.

இந்த மருத்துவமனைக்கு பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதியிலிருந்து மட்டுமின்றி, வால்பாறை, கிணத்துக்கடவு உள்ளிட்ட பல்வேறு பகுதியிலிருந்து தினமும் ஏராளமானோர். உள் மற்றும் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்று செல்கின்றனர். நகர் மட்டுமின்றி கிராமபுறங்களில் இருந்தும் நோயாளிகள் வருவதால் எப்போதும் கூட்டம் அதிகமாகவே இருக்கும்.

இந்த மருத்துவமனை கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த திராவிட மாடல் ஆட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்டு பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இந்த மருத்துவமனை தமிழகத்தில் சிறந்த மருத்துவமனையில் ஒன்றாக திகழ்கிறது. சிறந்த மருத்துவமனை மற்றும் பல்வேறு சிகிச்சை பிரிவுகள் இருந்தாலும், நோயாளிகளை கவனிப்பதற்கு போதிய செவிலியர்கள் இல்லாமல் இருப்பது பெரும் குறையாக உள்ளது.

மேலும் மருத்துவர்கள் பற்றாக்குறையும் இருப்பதால், சில நேரத்தில் நோயாளிகள் முறையான சிகிச்சை பெற முடியாமல் தவிப்பதாக கூறப்படுகிறது. மருத்துவர்களில் சிலர் விடுமுறைக்கு சென்றால், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள், மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கோ அல்லது தனியார் மருத்துவமனைக்கோ செல்லவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. மாவட்ட மருத்துவமனையாக திகழ்ந்தாலும், இங்கு வரும் நோயாளிகளை கவனிப்பதற்கு போதிய எண்ணிக்கையினாலான செவிலியர்களோ அல்லது உடனுக்குடன் சிகிச்சை மேற்கொள்ள போதியளவு மருத்துவர்களோ இல்லாமல் இருப்பதாக கூறப்படுகிறது.

இது குறித்து பொதுமக்கள் கூறுகையில், ”மாவட்டத்தில் முதன்மை பெற்ற மருத்துவமனையாக பொள்ளாச்சி மருத்துவமனை உள்ளது. ஆனால் இந்த மருத்துவமனையில் போதிய செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள், பணியாளர்கள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது. அனைத்து பிரிவுகளிலும், நோயாளிகளுக்கு விரைந்து சிகிச்சை அளிக்க மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பாதிக்கு பாதி எண்ணிக்கை குறைவு காரணமாக நோயாளிகளை முறையாக கவனிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், இந்த அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு விரைந்து சிகிச்சை அளிக்கும் வகையில் போதியளவு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமித்து முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

---

திராவிட மாடல் ஆட்சியில் தாய் உள்ளத்துடன் தொடங்கி வைக்கப்பட்ட

## தாயுமானவர் திட்டத்தை புறக்கணிக்க முடிவு!

### நியாவிலைக்கடை பணியாளர் சங்கம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 21–

தமிழ்நாடு நியாவிலைக்கடை பணியாளர் சங்க மாநில தலைவர் ராஜேந்திரன், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் கூட்டுறவு உணவு வழங்கல் பிரிவிற்கு அனுப்பி உள்ள மனுவில், வயதானவர்களுக்கு வீடு தேடி உணவு பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டத்தை மாதத்தின் 2வது வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைமுறைப்படுத்த வேண்டும். பயனாளிகளுக்கு பொருள்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்க வேண்டும். இத்திட்டம் செயல்படும் நாட்களில் மட்டும் ப்ளூ டூத் முறை, கைரேகை பதிவு தவிர்க்க வேண்டும். பிராக்சி முறையில் பொருள்கள் வழங்கலாம். வாகன வாடகை, ஏற்று கூலி, இறக்கு கூலி உயர்த்த வேண்டும். மாநில அளவில் கேஒய்சி என்பதான ரேகை பதிவு 99 சதவீதம் முடிவடைந்தது. அதிகாரிகள் அதனை 100 சதவீதம் முடித்து தர கடை பணியாளர்களை மன உளைச்சல் செய்கிறார்கள். அரசின் விடுமுறை நாட்கள் மற்றும் அதிக பட்ச வேலை நேரம் என பணியாளர்களுக்கு மேலிட உத்தரவு என டார்ச்சர் செய்வதை அதிகாரிகள் உடனடியாக கைவிட வேண்டும். வாணிப கிடங்கில் இருந்து சரியான எடையில் கடைகளுக்கு பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதிக பிரச்சினை இருப்பதால் வரும் ஜூலை மாதம் முதல் தாயுமானவர் திட்டத்தை புறக்கணிக்க முடிவு செய்திருக்கிறோம்,” என தெரிவித்துள்ளார்.

---

## சேலத்தில் நீட் தேர்வு - மாணவி தற்கொலை!

சேலம், ஜூன் 21–

சேலம் மாவட்டம் கொங்கனாபுரம் வெள்ளாள புரத்தைச் சேர்ந்த சேகர் (வயது47) இவரது மகள் கோபிகா (வயது 19) இவர் பிளஸ் டூ முடித்து 2 முறை நீட் தேர்வு எழுதியும் தேர்வில் வெற்றி பெறவில்லை 3வது முறையாக நீட் தேர்வு எழுத இரவு, பகலாக படித்துக் கொண்டு இருந்தார்.

நடப்பாண்டில் 3வது முறையாக நீட் தேர்வு எழுதினார். ராஜஸ்தானில் நீட் தேர்வு வினாத் தாள் கசிந்ததை யொட்டி நீட் தேர்வு ரத்து செய்து விட்டதாக அறிவிக்கப்பட்டது

இதனால் தேர்வில் அதிக மதிப் பெண்கள் பெற்று தேர்ச்சி அடைவோம் என்று எதிர்பார்த்து வந்த நிலையில் தேர்வு ரத்து செய்யப்பட்டதாலும் இன்று 21 ம் தேதி நீட் தேர்வு நடைபெற இருந்த நிலையில் மன உளச்சலில் இருந்த கோபிகா வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். நீட் தேர்வு குளறுபடியால் மாணவி கோபிகா தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சேலம் மாவட்டத்தை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எல். பலராமன்

**ஜூன் 21 (2020)**



தனது இளம் வயதிலேயே
கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு
கழகப் பணியாற்றியவர்

வடசென்னை மாவட்டத்தில்
வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர்
என படிப்படியாக உயர்ந்து மாவட்டச்
செயலாளராக பொறுப்பு வகித்து கழகம்
ஆட்சியில் இருந்தபோதும் –
எதிர்க்கட்சியாக இருந்தபோதும்,
வடசென்னையில் கழகம் வளர
பாடுபட்டவர். வடசென்னையில்
முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர்
ஆகியோர்களை கொண்டு பல
பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன்
சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினராக
பணியாற்றியதுடன், மத்திய கூட்டுறவு
வங்கித் தலைவராக பணியாற்றியவர்.

“இவர் பலராமன் அல்ல; ‘பலே ராமன்’
என்று முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களால் பாராட்டப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் –
ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து
நடத்திக் காட்டியதோடு, அதில் கலந்து
கொண்டு சிறை சென்றவர்.

“கழகப் பணிகள் அனைத்தையும்
அமைதியாக, அவர் என்ன மாதிரிப்
பணியாற்றுகிறார் என்றே தெரியாத
அளவுக்கு அடக்கமாக ஆற்றுவதோடு,
அவை அனைத்தையும் நடத்தி முடிப்பார்.”
என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்
அவர்கள் தனது இரங்கல் செய்தியில்
குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனு ஆதி

**ஜூன் 21 (2005)**



தாம்பரம் பகுதியில்
கழகத்தை வளர்த்த
முன்னோடிகளில் ஒருவர்.

நகர்மன்றத் தலைவராக,
தமிழக சட்டப்பேரவை
உறுப்பினராக நான்கு
முறையும்
தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தமிழக சட்டப்பேரவைத்
தலைவராகவும்
பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம்,
இந்தி எதிர்ப்பு போராட்டம்
உள்ளிட்ட பல்வேறு
அறப்போராட்டங்களில்
கலந்து கொண்டு சிறை
சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**